# நியமன அதிகாரப்பத்திரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் காமினி லக்ஷ்மன் பீரிஸ் ஆகிய நான் அவுஸ்திரியா, செய்ஸ் பேர்க்கில் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றவர்களும் அங்கு வருகை புரிகின்றவர்களும் அல்லது அங்கு வசிக்கின்றவர்களுமாகிய சகல இலங்கையர்களுக்கும் சட்டபூர்வமான வழி வகைகளில் உதவி புரிவதற்கும் ஒத்தாசைகளை வழங்குவதற்கும் பாதுகாப்பு வழங்குவதற்கும் அதிகாரத்துடனும் தத்துவத்துடனும் அவுஸ்திரியா, செய்ஸ் பேர்க்கில் வதிவிடத்துடன் அவுஸ்திரியா, செய்ஸ் பேர்க்கில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான கௌரவ காவற் தூதராக திரு.ஜேர்ஹார்ட் ஹியூபர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை யாவருக்கும் அறியத்தருகின்றேன்.

அவர் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உதவிகளை அவருக்கு நம்பிக்கையுடனும் பற்றுறுதியுடனும் வழங்குமாறும் அத்துடன் ஏனைய நட்பு நாடுகளின் கௌரவ தூதர்களுக்கு உரிய உரிமைகளையும் சலுகைகளையும் அவருக்கு வழங்குமாறும் சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளிடம் நான் நட்பு ரீதியாக கோரிக்கை விடுக்கின்றேன்.

இந்த நியமனமானது நியமன அதிகாரப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து ஐந்து (05) வருட காலத்திற்கு செயல்வலுவில் இருக்கும்.

புத்த சகாப்தத்தின் இரண்டாயிரத்து ஐந்நூற்றி ஐம்பத்தாறாம் வருடத்தின் வப் மாதத்தின் தேய் பிறையின் பத்தாம் நாள் வியாழக்கிழமை ஆகிய இன்று (கிறிஸ்து சகாப்தத்தின் இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டு யூன் மாதம் 14 ஆம் நாள் வியாழக்கிழமை) எனது கையொப்பத்துடன் கொழும்பில் உள்ள அலுவலகத்தின் இலாஞ்சனையுடன் என்னால் உறுதிப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்டது.

பேராசிரியர் காமினி லக்ஷ்மன் பீரிஸ், பா.உ.,
வெளிவிவகார அமைச்சர்,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு.